எந்தவிதமான குந்தகமும் ஏற்படாது என்று விவரமாகக் கூறினேன். அவர்கள் இந்த அலுவலகத்தை மாற்றுவதற்குச் சொல்கிற காரணம் பொருந்தாக் காரணம். அப்படியே மாற்றுவதற்குச் சரியான காரணம், அவசியம் ஏற்பட்டாலும் சென்னைக்கு மாற்றிக் கொள்ளலாம் என்று அரசு வலியுறுத்திக் கூறி வந்திருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பிரதம மந்திரியவர்களுக்கு இந்த அடிப்படையிலே எழுதியுள்ளார்கள். எனவே மாண்புமிகு உறுப்பினர் எண்ணிக் கொண்டு இருப்பதுபோல இதற்கு என்று தனியாக ஒரு தீர்மானம் தேவையில்லை என்று நான் கூறுகிறேன்.

(2) இன்றியமையாப் பண்டங்களின் விலை உயர்வைத் தடுக்க நடவடிக்கை எடுப்பது குறித்து.

DR. H. V. HANDE: Sir, I wish to call the attention of the Hon. Minister for Food and Local Administration to a matter of urgent public importance, namely, the disappointment and dissatisfaction among the public due to spiralling prices of essential commodities and the need to take necessary, immediate steps to check the spiralling prices.

10-00 மு.ப.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: முக்கியமாக உள்நாட்டு உற்பத்தி மூலம் ஈடுசெய்யப்படுகிற உணவு தானியங்கள் மற்றும் ஏனைய இன்றியமையாப் பண்டங்களின் உற்பத்தியை அதிகரித்ததற்கென இவ்வரசு மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாக விலைகள் இறங்கியுள்ளன. அரிசி, மற்றும் மட்டரக தானியங்கள், மிளகாய், மஞ்சள் ஆகியவற்றின் உச்ச விலைகள் 1969-ஆம் ஆண்டில் நிலவிய உச்ச விலைகளுடன் ஒப்பிட்டால் அவை 1970-ல் மிகவும் குறைவாக இருந்தன. தற்போதைய விலை அளவுகள்கூட 1970 மார்ச்சில் நிலவிய விலை அளவுகளை விடக் குறைவாகவேயுள்ளன. இருந்தபோதிலும் ஏனைய மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்யப்படும் இனங்களான நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய், பருப்புகள் போன்றவற்றின் விலைகள் அதிகரித்துள்ளன. இந்த விலையுயர்வு மாநிலத்திற்குள் உற்பத்தி செய்யப்படும் பண்டங்களின் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் விளைவாக வாழ்க்கைச் செலவுக் குறியீட்டு எண்ணில் ஏற்பட்ட குறைவை நிரப்பியுள்ளது. இதன் விளைவாக உணவுத் தொகுதிக்குரிய மொத்தக் குறியீட்டு எண்ணில் 168..6 புள்ளிகளிலிருந்து 169.7 புள்ளிகளாக உயர்ந்ததில் 1.1 புள்ளி அதிகரிப்பு ஏற்பட்டிருக்கிறது. மொத்த வாழ்கைச் செலவு குறியீட்டு எண்ணில் 0.66 புள்ளி அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

ஏனைய மாநிலங்களிலிருந்து முக்கிய விளை பொருள்கள் பெறவேண்டியுள்ளதன் விளைவால் குறியீட்டு எண்ணில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு 3.4 புள்ளிகளாகும். இந்த அதிகரிப்பு முக்கியமாக மாநிலத்திற்குள் உற்பத்தி செய்யப்படுகிற பொருள்களின் விலை இறக்கத்தால் ஈடுசெய்யப்பட்டுள்ளது. (மாநிலத்திற்குள் உற்பத்தி செய்யப்படுகிற பொருள்களின் விலைகள் வாழ்க்கைச் செலவுக் குறியீட்டு எண்ணில் ஏறத்தாழ 35 சதவீதமாகும்). இந்த விலை இறக்கம் மொத்த வாழ்க்கைச் செலவுக் குறியீட்டு எண்ணில் 3.2 புள்ளிகளாகும். 1971 பிப்ரவரியில் மொத்த வாழ்க்கைச் செலவுக் குறியீட்டு எண் 172.1; 1970 பிப்ரவரியில் 166 ஆகும். இந்த இனங்கள் தொடர்பாக வாழ்க்கைச் செலவுக்குறியீட்டு எண்ணில் ஏறத்தாழ 5 சதவீதம் குறைவு ஏற்பட்டுள்ளது.

இவ்வரசு பருப்பு வகைகள் உற்பத்தியை அதிகரிப்பதற்காக 5.35 லட்சம் ஏக்கரில் ரூ. 24 லட்சம் செலவில் ஒரு திட்டத்திற்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. தென்னை வளர்ப்பு திட்டத்தின் கீழ் பரப்பளவை அதிகரிப்பதற்கும் அவற்றின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கும் உரிய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

காப்பிக்கொட்டையின் விலை 1970-ம் ஆண்டில் பெருமளவிற்கு உயர்ந்தது. உற்பத்தி குறைந்த போதிலும் ஏற்றுமதி அளவை காப்பி வாரியம் ஒரே நிலையில் நீடித்து வந்ததுதான் இதற்குக் காரணம். காப்பி வாரியம் அதன் 'டிப்போக்கள்' மூலம் காப்பிக் கொட்டை விற்பனை செய்யப்படுவதையும் சிறிதுகாலம் நிறுத்தி வைத்தது. இது குறித்து உடனடியாக இவ்வரசு இந்திய அரசுக்கு எழுதியது அதன் பேரில் காப்பி வாரியம் 1—1—1971 முதல் 'டிப்போ' விற்பனையை மீண்டும் தொடங்கியது. விலை கணிசமான அளவுக்குக்குறைந்தது. தற்போது காப்பிக் கொட்டையின் விலை 1970 மார்ச்சில் நிலவிய விலையின் அளவிலேயே உள்ளது.

விறகு விலை உயர்ந்துள்ளது. இதனால் வாழ்க்கைக் குறியீட்டு எண்ணில் 2 புள்ளி அதிகரித்துள்ளது. இதற்கு முக்கியக் காரணம் நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் வழங்கும் "லீக்கோ" கரி வழங்கல் நிலை குறைந்து விட்டது. ஆந்திரப் பிரதேசத்திலிருந்து இறக்குமதியாகும் நிலக்கரியும் விறகும் போக்கு வரத்து நெரிசல் காரணமாகப் போதுமானதாக இல்லை என்பதும் ஒரு காரண மாகும்.

தயாரிக்கப்படும் பொருள்களின் விலையும் அதிகரித்து வந்துள்ளது. இதனால் 1970 பிப்ரவரியிலிருந்து 1971 பிப்ரவரி வரையில் வாழ்க்கைச் செலவுக் குறி யீட்டெண்ணில் 2.48 புள்ளிகள் அதிகரிக்க இடமேற்றப்பட்டது. ஆக, 1970 பிப்ரவரிக்கும் 1971 பிப்ரவரிக்குமிடையில் ஏற்பட்ட மொத்த அதிகரிப்பாகிய 6.1 புள்ளிகளில், எரிபொருள், உற்பத்திப் பொருள்கள் ஆகியவற்றின் விலை யேற்றத்தினால் 4.48 புள்ளிகள் அதிகரிக்க இடமேற்பட்டது. குறிப்பாக, உற்பத்திப் பொருள்களின் விலை அதிகரிப்புக்குப் பல காரணங்களைச் சொல்ல லாம். இவற்றுள் முக்கியமாக உற்பத்தி அளவுகளையும், இந்திய அரசின் பொரு ளாதாரக் கொள்கைகளையும், அனைத்து நாட்டு விலைவாசி அமைப்பையும் விலை அதிகரிப்பையும் காரணமாகச் சொல்லலாம். மத்திய நாணய-பொருளாதார நிறுவனங்கள் இத்தகைய கொள்கைகளை உருவாக்குகின்றன. அவற்றை யொட்டியே விலைவாசியும் அமைகிறது. விலை உயர்வைக் கட்டுப்படுத்த ஒருங் கிணைந்த அடிப்படையில் முடிவுகள் எடுக்கப்படும் வகையில், இத்தகைய நேர்வு களில் மத்திய மாநில அரசுகளுக்கிடையே தொடர்ச்சியாக விரிவான ஆலோ சனை நடத்த வேண்டியதன் அவசியம் ஆளுநர் இம்மன்றத்தின் முன் ஆற்றிய பேருரையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

DR. H. V. HANDE : Will the Hon. Minister for Food take steps to see that proper negotiation is conducted with the Neyveli Lignite Corporation and immediate steps are taken to get more LECO at a lesser rate? May I know whether steps had been taken and if so, what are the details?

1971 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, நெய்வேலி லிக்னைட் கார்ப்பொரேஷன் அவர்களிடம் விசாரித்ததில், உற்பத்தியாகும் நிலக்கரி குறைந்திருப்பதன் காரணமாக இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது என்றும், வேறு காரணம் இல்லை என்றும் தெரிவிக்கிறேன்.

(4) அறிவிப்புக்கள்.

(அ) நடைமுறை விதிக் குழுவிற்கு நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு சில அறிவிப்புகள். தமிழ்நாடு சட்டப் பேரவையின் 229 (1)-வது விதியின்கீழ் 1971-72-ம் ஆண்டுக்குப் பின் வரும் உறுப்பினர்களை நடைமுறை விதிக் குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்:—

1. மாண்புமிகு திரு. மு. கருணாநிதி (முதலமைச்சர்)
2. மாண்புமிகு திரு. இரா நெடுச்செழியன் (பேரவை முன்னவர்)
3. மாண்புமிகு திரு. செ. மாதவன் (தொழிலமைச்சர்)
4. திரு. பெ. சீனிவாசன் (பேரவைத் துணைத் தலைவர்)
5. திரு. த. ப. அழகமுத்து
6. திரு. க. உரோ. எட்மண்ட்
7. திரு. எம். தேவராசன்
8. திரு. சொ. காவேரிமணியம்
9. திரு. பழனிவேல் ராஜன்
10. திரு. என். டென்னிஸ்
11. திரு. மு. சத்தியமூர்த்தி
12. திரு. கே. டி. கே. தங்கமணி
13. திரு. ஏ. ஆர். மாரிமுத்து
14. திரு. எம். ஏ. அபுசாலி
15. டாக்டர் எச். வி. ஹாண்டே
16. திரு. ஏ. ஆர் பெருமாள்

பேரவைத் தலைவர், அலுவல் காரணமாக இக் குழுவின் தலைவர் ஆவர்.

(ஆ) சட்ட விதிகள் ஆய்வுக் குழுவிற்கு நியமனம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டப் பேரவையின் 201 (1)-வது விதியின்கீழ் 1971-72-ம் ஆண்டுக்கு பின்வரும் சட்டப் பேரவை உறுப்பினர்களை சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கிறேன் :—

1. பேரவைத் துணைத் தலைவர்
2. திரு. எஸ். கணேசன்
3. திரு. எம். கந்தசாமி
4. திரு. அ. இராசமாணிக்கம்
5. திரு. மா. சுப்பிரமணியன்